இருக்கிறார்கள். ஆனால் நடை முறையில் எதிர்க் கட்சி எதைச் செய்யுங்கள் என்று சொன்னாலும், சர்க்கார் அதைச் செய்யமாட்டார்கள். அவர்களாகவே விரும்பி அவர்களுக்கு தோன்றிய பொழுது தான் செய்வது என்பது வழக்கமாகிவிட்டது. இந்தச் சமயத்தில் ஒரு விஷயததை ஞாபக மூட்ட விரும்புகிறேன். அது தேர்தலின் போது ஆட்சியாளருக்கும் சரி, எதிர்க் கட்சியினருக்கும் சரி, பயன்படும். நாங்கள் தமிழ் நாடு என்று இந்த ராஜ்யத்துக்கு பெயரிடவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். எங்களுடைய வற்புறுத்தலை வேண்டுமானாலும் இப்பொழுது குறைத்துக் கொள்ளுகிறோம். சர்க்காராகவே, "தமிழ் நாடு" என்று பெயர் வைக்க ஒரு திருத்தம் கொண்டு வந்து, அதை மத்திய அரசாங்கத்துக்கு சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(4) SWAYAMARIATHAI MARRIAGE BILL.

Sri P. RANGASWAMI REDDIAR: (On a point of information, Sir) சில மாதங்களுக்கு முன்பு கனம் நிதி அமைச்சர் அவர்கள் சுயமரியாதை திருமணங்களையும், மற்றும் சில திருமணங்களையும் செல்லுபடி ஆக்குவதற்காக ஒரு மசோதா கொண்டு வருவதாக உறுதி அளித்தார்கள். அந்த மாதிரி ஒரு மசோதா தயாரிக்கப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : அது பரிசீலனையிலிருக்கிறது. இந்தக் கூட்டத்தில் அதை எடுத்துக்கொள்வதற்கு அவகாசமிருக்குமா வென்று சொல்ல முடியாது.

III.—GOVERNMENT MOTION.

MOTOIN UNDER RULE 21 (3) OF THE ASSEMBLY RULES *re* CHANGE IN THE ORDER OF VOTING ON DEMANDS FOR ADVANCE GRANTS FOR THE YEAR 1957–58.

The Hon. Sri C. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Demands for Advance Grants for the year 1957–58 be taken up in the order set out below :—

1. XXIII—Labour including Factories.
2. VII—General Sales Tax and Other Taxes and Duties Administration.
3. IX—Heads of States, Ministers and Headquarters Staff.
   XI—District Administration and Miscellaneous.
4. XXII—Harijan Uplift.
5. XII.—Administration of Justice.
   XIII—Jails.
   XIV—Police.
6. IV—Forest Department.
   XVIII—Agriculture and Fisheries.
   XIX—Veterinary.
7. XXIV—Civil Works—Works.
   XXV—Civil Works—Establishment and Tools and Plant.